Padasalai

# டால்பின்

# உன்னால் முடியும்

# தமிழ்

புதிய
பாடத்திட்டம்
2019

# 11

**அரசின் புதிய பாடத்திட்டத்தின் படியும்
விடைக்குறிப்பு அடிப்படையிலும்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.**

98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in

© All Copyrights reserved

விலை : ரூ.198

Padasalai

# பதிப்புரை

அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே!

வணக்கம். மேல்நிலை முதலாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளீர்கள். உங்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

மேல்நிலை முதலாண்டு மொழிப்பாடத்தில் உயரிய மதிப்பெண்ணை நீங்கள் பெறவேண்டும் என்ற நோக்கில் இந்த 'டால்பின்' உரைநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் மிகச் சிறந்த ஆசிரியர்கள் உள்ளடங்கிய ஆசிரியர் குழுவினர் வினாக்களுக்கான விடைகளை எழுதியுள்ளனர்.

இயல்தோறும் உரைநடை, செய்யுள், துணைப்பாடம், இலக்கணம் எனப் பகுதி வாரியாகப் பாடநூல் வினாக்களுக்கான விடைகள் தெளிவாக, சுருக்கமாகச் சரியான முறையில் தரப்பட்டுள்ளன. தொடர்ந்து 'மொழியை ஆள்வோம்' என்ற பகுதியில் உள்ள மொழிப் பயிற்சிகள் உங்களுடைய மொழியாற்றலை வளர்க்கும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயலிலும் பாடப்பிரிவு வாரியாகக் கூடுதல் வினா – விடைகள் தரப்பட்டுள்ளன. நிறைவாக மாணவர்கள் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் மொழிப்பயிற்சிகள், இலக்கணக்குறிப்புகள், பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி விதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

பாடப்பொருளைப் புரிந்துகொண்டு உள்வாங்கி, அதனைச் சொந்த நடையில், சுயசிந்தனையோடு, பாடம் தொடர்புடைய பிற செய்திகளோடு மாணவர்கள் விடையெழுத வேண்டும் என்பதே கல்வித்துறையின் எதிர்பார்ப்பு. அதனையொட்டியே வினாத்தாள் தயாரிக்கப்படுகிறது. அதனைக் கருத்தில் கொண்டு எமது உரைநூலில் நெடுவினாக்களுக்கான விடைகள் தயாரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் உங்களைச் சிந்திக்கத் தூண்டுவதாக இவ்விடைகள் அமையும் என நம்புகிறோம்.

மொழிப்பாடத்தில் கூடுதல் மதிப்பெண்களைப் பெறவும், போட்டித் தேர்வுகளைச் சிறந்த முறையில் கையாண்டு வெற்றி பெறவும் எமது டால்பின் உரை உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**முயன்று படித்துச் சிறப்பாக வெற்றிபெற வாழ்த்துக்களுடன்...**

உன்னால் முடியும் தமிழ்,
டால்பின் வெளியீட்டாளர்.

Padasalai

# பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | i |
| 1 | மொழி என்னுயிர் என்பேன் | உரைநடை | பேச்சுமொழியும் கவிதைமொழியும் | 1-19 |
| | | செய்யுள் | யுகத்தின் பாடல் | |
| | | செய்யுள் | நன்னூல் பாயிரம் | |
| | | துணைப்பாடம் | ஆறாம் திணை | |
| | | இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | |
| 2 | மாமழை போற்றுதும் | உரைநடை | இயற்கை வேளாண்மை | 20-45 |
| | | செய்யுள் | ஏதிலிக் குருவிகள் | |
| | | செய்யுள் | காவியம் | |
| | | செய்யுள் | திருமலை முருகன் பள்ளு | |
| | | செய்யுள் | ஐங்குறுநூறு | |
| | | துணைப்பாடம் | யானை டாக்டர் | |
| | | இலக்கணம் | புணர்ச்சி விதிகள் | |
| | | | மெய்ம்மயக்கம் (தெரிந்து கொள்வோம்) | |
| 3. | பீடு பெற நில் | உரைநடை | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு | 46-75 |
| | | செய்யுள் | காவடிச்சிந்து | |
| | | செய்யுள் | குறுந்தொகை | |
| | | செய்யுள் | புறநானூறு | |
| | | துணைப்பாடம் | வாடிவாசல் | |
| | | இலக்கணம் | பகுபத உறுப்புகள் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| 4. | கேடில் விழுச்செல்வம் | உரைநடை | தமிழகக் கல்வி வரலாறு | 76-101 |
| | | செய்யுள் | பிள்ளைக்கூடம் | |
| | | செய்யுள் | நற்றிணை | |
| | | செய்யுள் | தொல்காப்பியம் | |
| | | துணைப்பாடம் | இதழாளர் பாரதி | |
| | | இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | |
| 5. | நாளெல்லாம் வினைசெய் | உரைநடை | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 102-129 |
| | | செய்யுள் | சீறாப்புராணம் | |
| | | செய்யுள் | அகநானூறு | |
| | | துணைப்பாடம் | பிம்பம் | |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | பல்கலை நிறுவு | உரைநடை | காலத்தை வென்ற கலை | 130-155 |
| | | செய்யுள் | ஆத்மாநாம் கவிதைகள் (கேள்வி ஒரு புளியமரம்) | |
| | | செய்யுள் | குற்றாலக் குறவஞ்சி | |
| | | செய்யுள் | திருச்சாழல் | |
| | | துணைப்பாடம் | இசைத்தமிழர் இருவர் | |
| | | இலக்கணம் | கலைச்சொல்லாக்கம் | |
| | | | நிறுத்தற்குறிகள் (தெரிந்து கொள்வோம்) | |
| 7. | வையத் தலைமை கொள் | உரைநடை | காற்றில் கலந்த பேரோசை | 156-174 |
| | | செய்யுள் | புரட்சிக்கவி | |
| | | | பதிற்றுப்பத்து | |
| | | துணைப்பாடம் | சிந்தனைப் பட்டிமன்றம் | |
| | | இலக்கணம் | ஆக்கப்பெயர்கள் | |
| 8. | யாரையும் மதித்து வாழ் | உரைநடை | தாகூரின் கடிதங்கள் | 175-192 |
| | | செய்யுள் | ஒவ்வொரு புல்லையும் | |
| | | செய்யுள் | தொலைந்து போனவர்கள் | |
| | | செய்யுள் | மனோன்மணீயம் | |
| | | துணைப்பாடம் | செவ்வி | |
| | | இலக்கணம் | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | |
| | | | மொழிப்பயிற்சி | 193 |
| | | அரசு பொது த் தேர்வு மார்ச் 2019 வினாத்தாள் | | 252 |

- தன்னிடத்தில் படித்த மாணவர்கள் உயருவதிலே தான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு மேலிடுகிறது. ஆசிரியர்கள் பணி கைம்மாறு கருதாத தியாகப்பணியாகும்.



–பேரறிஞர் அண்ணா

# என்னுயிர் என்பேன்

# இயல் 1

| | | |
|---|---|---|
| உரைநடை | பேச்சுமொழியும் கவிதைமொழியும் | *இந்திரன்* |
| செய்யுள் | யுகத்தின் பாடல் | *சு. வில்வரத்தினம்* |
| செய்யுள் | நன்னூல் பாயிரம் | *பவணந்தி முனிவர்* |
| துணைப்பாடம் | ஆறாம் திணை | *அ. முத்துலிங்கம்* |
| இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | |

**என்னுயிர் என்பேன் என்னும் இயலின் கண் அறியும் கருத்துகள்**

- பேச்சு மொழிக்கும் கவிதை மொழிக்கும் உள்ள தனித்தன்மை.
- பாயிரத்தின் இன்றியமையாமை.
- புலம் பெயர்தல் சூழல்
- மொழி முதல், இறுதி எழுத்துகள்.

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. **தவறான இணையைத் தேர்வு செய்க.**
அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
இ) கடல் + அலை - உயிர் + மெய் ஈ) மண் + வளம் - மெய் + மெய்
**[இ) கடல் அலை - உயிர் + மெய்]**

2. **கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப் பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**
அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3) **அண்ணா**
ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10) **கல்யாணசுந்தரனார்**
இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் (6) **பாரதிதாசன்**
ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் (2) **ஜீவா**

3. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
   1. காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
   **அதிகாலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.**
   2. முயற்சி செஞ்சா அதுக்கேற்ற பலன் வராம போவாது.
   **முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.**
   3. காலத்துக்கேத்த மாரி புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
   **காலத்துக்கேற்றாற் போல புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.**
   4. ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமா பதிய வைக்கனும்.
   **ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.**

5. தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனா பதட்டமாயிரும்.
**தேர்வெழுத விரைவாகச் செல்லுங்கள், நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.**

## வினாக்கள்:

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

- மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் - 22
- அவை : உயிர் எழுத்துகள் - 12 (அ முதல் ஔ வரை)
- மெய் எழுத்துகள் - 10 (க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ)

**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.**

- மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் : 24
- உயிர் எழுத்துகள் - 12 (அ முதல் ஔ வரை)
- மெய் எழுத்துகள் - 11 (ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்)
- குற்றியலுகரம் - 1 இவையே மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளாகும்.

**எ.கா.** நாடு - உயிரீறு
தமிழ் - மெய்யீறு
வீடு - குற்றியலுகர ஈறு

**இ) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.**

- நிலை மொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக நிற்பின் அதை உயிரீறு என்பர்.
- எ.கா.- மணிமாலை - மணி + மாலை - (மணி - நிலைமொழி) (ணி- இறுதி எழுத்து - ண் + இ)
- நிலை மொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக நிற்பின் அதை மெய்யீறு என்பர்.
- எ.கா.- பொன்வண்டு - பொன் + வண்டு - (பொன் - நிலை மொழி) (ன் இறுதி எழுத்து)

**ஈ) உயிர் முதல், மெய்முதல் - எடுத்துக்காட்டுத் தருக.**

- வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருப்பின் அது உயிர் முதல் எனப்படும்.
- எ.கா.- வாழையிலை - வாழை + இலை - (இலை - வருமொழி) (இ - முதல் எழுத்து)
- வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருப்பின் அது மெய் முதல் எனப்படும்.
- எ.கா. - தமிழ்நிலம் - தமிழ் + நிலம் - (நிலம் - வருமொழி) (நி (ந்+இ) முதல் எழுத்து)

**உ) குரங்குக்குட்டி - புணர்ச்சியை விளக்குக.**

- குரங்குக்குட்டி - குரங்கு + குட்டி
- இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் - **குரங்குக்குட்டி**

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

1. **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ **[iii) ஆ, ஈ]**

2. **''கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
காலத்தால் சாகாததொல் கனிமங்கள்'' - அடி மோனையைத் தெரிவு செய்க.**
அ) கபாட புரங்களை - காவு கொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத **[இ) கபாடபுரங்களை - காலத்தால்]**

3. **பாயிரம் இல்லது_________ அன்றே.**
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை **[ஆ) பனுவல்]**

4. **ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**
அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியைத் திட திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.
**இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.**
ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்து மொழி எளிமையானது.
**[இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது]**

5. **மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானவற்றைக் கண்டுபிடிக்க.**
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம் **[அ) அன்னம், கிண்ணம்]**

## குறுவினா

1. **பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**
   - எழுத்துமொழியில் எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது.
   - ஆனால் பேச்சுமொழியில் முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
   - அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

2. **என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றி மண் அழகே!
வழி வழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!**
**- இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**
   - தொழுதவர்,
   - உழுதவர்,
   - விதைத்தவர்,
   - வியர்த்தவர்

3. **'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது? (மார்ச்.19)**
   - நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளக்கத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறைப்பற்றிப் பேசுவது பாயிரம் ஆகும்.

**4. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகையான ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?**

- உயிரெழுத்து (த் + உ) = உயிரீறு
- பன்னிரண்டு (ட் + உ) = உயிரீறு
- திருக்குறள் (ள்) = மெய்யீறு
- நாலடியார் (ர்) = மெய்யீறு

**5. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.**

- தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை - **இரசூல் கம்சதோவ்**

---

## சிறுவினா

**1. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

- நாட்டையும், மொழியையும் வாழ்த்தி, தாய்மொழிக்குத் தொண்டாற்றிய சான்றோர் பெருமக்களைப் போற்றிப் பாட வேண்டும்.
- நமது தாய்மொழியாம் தமிழ்மொழியின் தொன்மம், காலத்தால் அழியாத வகையில் வலிமை சேர்க்கப்பாட வேண்டும் என்று கவிஞர் சு.வில்வரத்தினம் குறிப்பிடுகின்றார்.

**2. நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

- நூலுக்கு முன் சொல்லப்படுவது முகவுரை ஆகும். பாயிரம் என்பது முகவுரையே.
- பொதுப்பாயிரத்தில் வாயிலாக அறியப்படும் செய்திகள்:
  நூலின் இயல்பு, ஆசிரியரின் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை இந்த ஐந்து கருத்துகளும் பொதுப்பாயிரத்தின் வாயிலாக அறியப்படும் கருத்துகள் ஆகும்.
- சிறப்புப் பாயிரத்தில் அறியலாகும் செய்திகள்:
  நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர், (தொகை, வகை, விரி ஆகியவற்றுள்) இயற்றப்பட்ட யாப்பு வகை, நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலைக் கேட்போர் (மாணவர்), நூலைக் கற்பதால் பெறுகின்ற பயன் ஆகிய எட்டுச் செய்திகளைத் தெரிவிப்பது சிறப்பு பாயிரமாகும்.

**3. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.**

- தமிழ் மொழி என்றென்றும் என் உயிர் மொழி ஆகும்.
- மனிதன் எனும் அடையாளத்தை தந்தது மொழியே ஆகும்.
- அறிவால் உலகை அறிவதும்.
- அறிதலுக்குத் தோற்றுவாயாகத் திகழ்வது மொழியே ஆகும்.
- என்னை உருவாக்குவதும், உலகோர் முன் நிறுத்தச்செய்வதும் என் தாய்மொழியே ஆகும்.
- அதனால் தமிழை என்னுயிர் என்பேன்.

**4. கூற்று : குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று;
நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.**

**கவிதை : கூண்டு திறந்தது
சிறகடிக்கவா?
இல்லை! சீட்டெடுக்க.**

**கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

- ஒன்றை மற்றொன்றால் உணர்த்துவதே குறியீடு.
- கிளி இருப்பது கூண்டில்; அது திறந்தாலும் பறப்பதற்கன்று; சீட்டெடுப்பதற்கு என அடிமைகளின் வாழ்வியல் முறை கூற்றில் குறியீடாக அமைந்துள்ளது.

5. **மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.**

✓ **மொழி முதல் எழுத்துகள் : 22**

- **உயிரெழுத்துகள் - 12**

அ - அம்மா, ஆ - ஆற்றல், இ - இதயம், ஈ - ஈழம், உ - உயிர், ஊ - ஊக்கம், எ - எளிது, ஏ - ஏற்றம், ஐ - ஐப்பசி, ஒ - ஒற்றுமை, ஓ - ஓலை, ஔ - ஔவை.

- **மெய்யெழுத்துகள் - 10**

க - கடல், ங - ஙனம், ச - சங்கம், ஞ - ஞாலம், த - தமிழ், ந - நன்றி, ப - பகல், ம - மரம், ய - யாழ், வ - வாள்

✓ **மொழி இறுதி எழுத்துகள் : 24**

- **உயிரெழுத்துகள் - 12**

சில - அ, அப்பா - ஆ, கல்வி - இ, தீ - ஈ, உலகு - உ, பூ - ஊ, அலை - ஐ, நொ - ஒ, போ - ஓ, கௌ - ஔ.

- **மெய்யெழுத்துகள் - 11**

நாண் - ண், மரம் - ம், மான் - ன், தாய் - ய், பார் - ர் , அசல் - ல், யாழ் - ழ் நாள் - ள்.

- **குறிப்பு : ஞ், ந், வ் - பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதியில் வந்துள்ளன.**

**குற்றியலுகரம் - 1**

அச்சு - (சு = ச் + உ) வன்தொடர்க் குற்றியலுகரம்

---

## நெடுவினா

1. **நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

மொழிதான் ஒருவருடைய உலகத்தை, ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்புகிறது. மொழி ஒருவருக்கு அறிமுகமாவதற்கு முன்னால், பொருள்களும், விலங்குகளும், பறவைகளும், வானும், நிலவும், சூரியனும், மரங்களும், செடிகளும் அவருக்கு அறிமுகமானதாக இருந்திருக்க இயலாது. எனவே அத்தகைய மொழியைப் பேச்சுமொழி, எழுத்துமொழி என இரண்டு வகையில் வெளிப்படுத்தலாம். அப்படி வெளிப்படுத்தும்போது மொழியை நான் எவ்வாறு உணர்கிறேன் என்பதை இக்கட்டுரை விவரிக்கிறது.

**வாளினும் வலிமை:**

மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன், அந்தப் பொருளின்மீது எனக்கொரு **அதிகாரம்** வந்துவிடுவதை நான் உணர்கிறேன். எனவே மொழி நான் பெயரிட்டு அழைக்கும் பொருட்களின் மீது எனக்கு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுப்பதாக நான் உணர்கிறேன்.

**மொழி வெளிப்பாடு:**

உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும் என உணர்கிறேன். இதுமட்டுமின்றி, கைகால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் என்னுடைய **மொழி வெளிப்பாட்டின்** பகுதியாக உள்ளன.

**உறை பனிக்கட்டி:**

ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகின்றபொழுது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது.

**உணர்ச்சிக்கு அருகாமை:**

எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எழுதுவதை மட்டும்தான் நம் கை செய்கிறது. ஆனால் முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால் பேச்சு மொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளதை நான் உணர்கிறேன்.

**நேரடி மொழி:**

எழுத்து மொழியில் பேச்சைக்கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒருவகையில் தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு. ஆனால் பேச்சு என்பது தன்னைத் திறந்து கொள்கிற ஒரு செயல்பாடு; பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேசும்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. எனவே பேச்சுமொழியே நேரடி மொழி என நான் உணர்கிறேன்.

பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை; அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும், மாறிக் கொண்டும் இருக்கிறது. பேச்சு மொழியில் ஒரு கவிதை எழுதும் போது, அது உடம்பின் மேல்தோல் போல இயங்குகிறது. அதுவே எழுத்து மொழியாக இருக்குமானால், அது கவிதையின் உணர்வை உணர்ச்சியற்ற ஆடை போலப் போர்த்தி மூடிவிடுவதை நான் உணர்கிறேன்.

2. **நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.**

**பாயிரம்:**

நூலைப் புரிந்துகொள்ளவும், அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது. நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரம் ஆகும்.

**நன்னூல்:**

தமிழின் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்தில் பாயிரம் என்னும் அமைப்புக் காணப்படுகிறது. அதனைப் பின்பற்றி எழுதப்பட்ட நூலான நன்னூல், பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் குறித்து விளக்குகிறது. அதனைக் கீழே காண்போம்.

**பாயிரம் – உரிய எழு பெயர்கள்:**

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என ஏழு பெயர்களாலும் பாயிரம் வழங்கப்படும்.

**பாயிரம் – வகைகள்:**

பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.

**பொதுப்பாயிரம்:**

- நூலின் இயல்பு
- கற்கும் முறை
- ஆசிரியர் இயல்பு
- கற்பிக்கும் முறை
- மாணவர் இயல்பு

என ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம் ஆகும்.

**சிறப்புப்பாயிரம்:**

- நூலாசிரியர் பெயர்
- நூல் பின்பற்றிய வழி
- நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
- நூலின் பெயர்
- தொகை, வகை, விரி ஆகியவற்றுள் இயற்றப்பட்ட யாப்பு வகை
- நூலில் குறிப்பிடப்படும் கருத்து
- நூலைக் கேட்போர் (மாணவர்)
- நூலைக் கற்பதால் பெறுகின்ற பயன்

ஆகிய **எட்டுச்** செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரம் ஆகும்.

- நூல் இயற்றப்பட்ட காலம்
- அது அரங்கேற்றப்பட்ட அவைக்களம்
- அது இயற்றப்பட்டதற்கான காரணம்

என்னும் மூன்றையும் சேர்த்துக் கூறுவோரும் உளர்.

**பாயிரத்தின் சிறப்பு:**

- ஒரு நூலானது ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று, பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக் கூறினாலும், பாயிரம் இல்லையென்றால் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.
- மாடங்களுக்கு ஓவியங்களும், பெரிய நகரங்களுக்குக் கோபுரங்களும், அழகிய தோள்களைக் கொண்ட மகளிருக்கு அணிகலன்களும் எழிலைத் தரும். அதுபோல, எல்லாவகை நூல்களுக்கும் முகப்பில் அழகு தருவதற்காகப் பாயிரத்தை அமைக்கின்றனர்.

3. **தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?**

காலந்தோறும் நிலையான வாழ்விடங்களைத் தேடி புலம்பெயர்ந்தபடியே இருந்த நாடோடி இனம், நிலவுடைமைச் சமூகமாக மாறப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின. மண்ணிலிருந்து பயிர்களைப் பிடுங்கியெறிவது போல, தாய் மண்ணிலிருந்து மனித உயிர்களைப் பெயர்த்து எறியும்போக்கு காலந்தோறும் நடந்துவரும் பேரவலம் ஆகும். அத்தகைய ஒரு பேரவலத்தை அ.முத்துலிங்கம் அவர்களின் 'ஆறாம் திணை' படம் பிடித்துக் காட்டுகிறது.

**புலம்பெயர் இலக்கியம்:**

சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதைப் பாடும் பாடல்கள் உள்ளன. பொருள் தேடுவதற்காகப் பிரிந்து செல்வதைப் 'பொருள் வயின் பிரிவு' என்றார்கள் சங்கத்தமிழர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அரசனின் கொலைச் சீற்றத்துக்குப் பயந்து, சொந்த நாட்டை விட்டு ஓடியவர்களைப் பற்றி தனிமகனார் எழுதிய நற்றிணைப் பாடல் (எண்.153) கூறுகிறது.

**அகதிகள் முகாம்:**

இலங்கையில் இனக்கலவரம் நடந்தபோது, மவுண்லவினியா என்னும் இடத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்திருக்கிறார் கவிஞர் அ.முத்துலிங்கம் அவர்கள். அப்போது வீட்டுச் சொந்தக்காரர், தான் சிங்களவராக இருந்தபோதும் அவர்களைக் காப்பாற்றி அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

அடுத்தவேளை உணவு எப்போது வரும் என்று தெரியாத அவலநிலை. யாரோ ஒருவருடைய மேலங்கி மட்டுமே மாற்று உடையாகக் கிடைத்த சோகம். இதுபோன்ற கீழான நிலை இனி வாழ்வில் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியை அவர் மேற்கொண்டதைச் சுட்டிச் செல்கிறார்.

**கனடா வாழ் தமிழர்கள்:**

திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் கனடாவில் பிறந்தவர். தமிழ் அகதிகள் 1983-ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் கனடாவுக்குக் குடிபெயரத் தொடங்கினர். ஆனால் சில ஆண்டுகளிலேயே பத்திரிக்கைகளையும், இலக்கிய இதழ்களையும் தொடங்கிப் புது வாழ்க்கையைப் பதிவு செய்யத் தொடங்கிவிட்டனர். உலகின் இரண்டாவது பெரிய தேசமான கனடாவில் தமிழர்கள் வாழும் சாலை ஒன்றுக்கு 'வன்னி வீதி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

**புலம் பெயர் தமிழர்கள்:**

புலம்பெயர் நாடுகளில் தமிழ் கற்க முனையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உலகம் முழுக்க 8 கோடித் தமிழர்கள் வாழ்கின்றனர். நியூசிலாந்திலிருந்து அலாஸ்கா வரை புலம்பெயர் தமிழர்கள் 10 இலட்சம்பேர் வாழ்கிறார்கள். கனடாவில் மட்டும் 3 லட்சம் தமிழர்கள் இருப்பதாகக் கணக்கெடுப்புக் கூறுகிறது. 2012-ஆம் ஆண்டு முதல், ஜனவரி 14-ஆம் நாள் 'தமிழர் பாரம்பரிய நாள்' எனப் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது.

**ஆறாம் திணை:**

சங்க இலக்கியம் ஐவகை நிலங்களைப் பற்றிப் பேசுகிறது. அந்நூல்களில் பனியும் பனி சார்ந்த நிலத்துக்கும் பாடல்கள் இல்லை. புலம்பெயர்ந்த 10 இலட்சம் மக்கள் சென்றடைந்தது பனிப் பிரதேசங்களைத் தான். அவர்கள் உலகம் பனியும், பனி சார்ந்த நிலமும். ஆம். அதுவே ஆறாம் திணை.

இவ்வாறு தமிழர் வாழ்வோடும், புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு இணைக்கப்பட்டுள்ளது.

## மொழியை ஆள்வோம் (பக்கம் - 22)

**சான்றோர் சித்திரம்**



தமிழ் இலக்கிய வரலாற்றில், ''புலமைக் கதிரவன்'' எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள அதவத்தூர் என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார்.

அவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்ற நூல் அவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத் தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே.சாமிநாதர், தியாகராசர், குலாம்காதிறு நாவலர் முதலானோர் இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

1. **தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் - இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.**
   உருவகத்தொடர்

2. **மேற்கண்ட பத்தியில் இடம் பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.**
   தேனுண்ணும் வண்டு போல - உவமைத்தொடர்
   புலமைக் கதிரவன் - உருவகத்தொடர்

3. **மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் - விடைக்கேற்ற வினாவை அமைக்க.**
   - மீனாட்சி சுந்தரனார் எவற்றைப் பாடுவதில் சிறந்தவர்?
   - தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

4. **பத்தியில் மொழி முதல் எழுத்துகளைக் கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச்சுட்டுக.**
   மகா வித்துவான், தலபுராணங்கள், யமக அந்தாதி, திரிபந்தாதி, கலம்பகம்.

5. **விளங்கினார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
   **விளங்கினார் - விளங்கு + இன் + ஆர்**
   விளங்கு - பகுதி
   இன் - இறந்தகால இடைநிலை
   ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

---

### தமிழாக்கம் தருக.

1. Pen is mightier than Sword.
2. Winners don't different things they, do things differently.
3. A picture is worth a thousand words.
4. Work while you work and play while you play.
5. Knowledge rules the World.

**விடைகள்**

1. எழுதுகோலின் முனை வாளின் முனையை விட வலிமையானது.
2. வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்வதில்லை. செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்.
3. ஓர் ஓவியம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.
4. உழைக்க வேண்டிய நேரத்தில் உழை! விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடு!
5. அறிவே உலகை ஆள்கிறது.

## பிறமொழிச்சொற்களைத் தமிழ்ப்படுத்துக.

1. வாடகை - குடிக்கூலி
2. மாதம் - திங்கள்
3. போலீஸ் - காவல்
4. நிச்சயம் - உறுதி
5. உத்திரவாதம் - உறுதி
6. சந்தோஷம் - மகிழ்ச்சி
7. சம்பளம் - ஊதியம்
8. ஞாபகம் - நினைவு
9. வருடம் - ஆண்டு
10. தேசம் - நாடு
11. வித்தியாசம் - வேறுபாடு
12. உற்சாகம் - மகிழ்ச்சி / பூரிப்பு
13. விசா - நுழைவு இசைவு
14. பாஸ்போர்ட் - கடவுச்சீட்டு
15. கம்பெனி - நிறுவனம்
16. பத்திரிகை - நாளிதழ்
17. கோரிக்கை - வேண்டுகோள்
18. யுகம் - ஊழி
19. ராச்சியம் - நாடு
20. சரித்திரம் - வரலாறு
21. முக்கியத்துவம் - முதன்மை
22. சொந்தம் - உறவு
23. சமீபம் - அருகில்
24. தருணம் - வேளை / தக்க சமயம்

2. **கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலைப் படித்து நாளிதழில் செய்தியாக வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**''அரியன கேள் புதியன செய்'' (திங்கள் கூடுகை)**

| நேரம் : 2.30 பிற்பகல் | இடம் : அ.மே.நி.பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை - மாணவர் இலக்கியச் செல்வன் |
| 2.40 | தலைமையுரை - திரு.எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை - கவிஞர் வாணி ''புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை'' |
| 3.45 | நன்றியுரை - மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |

**அனுப்புநர்**

தலைமை ஆசிரியர்,
நகராட்சி மேனிலைப்பள்ளி,
திருவண்ணாமலை.

**பெறுநர்**
முதன்மை ஆசிரியர் அவர்கள்,
தமிழ் இந்து நாளிதழ்,
திருவண்ணாமலை.
**மதிப்பிற்குரிய ஐயா,**
வணக்கம்.
**பொருள் :** எங்கள் பள்ளியில் நடந்த திங்கள் கூடுகை நிகழ்ச்சியை நாளிதழில் வெளியிட வேண்டுதல் தொடர்பாக.

-----

எங்கள் பள்ளியில் ''அரியன கேள் புதியன செய்'' என்னும் தலைப்பில் திங்கள் கூடுகை நிகழ்ச்சி சென்ற வாரம் 01.04.2019-ஆம் நாள் திங்கள்கிழமை அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கவிஞர் தமிழினி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். தலைமை ஆசிரியர் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சி பற்றிய செய்திக் கட்டுரையைக் கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். தங்கள் நாளிதழில் அதனை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

நன்றி!

**இடம் :** திருவண்ணாமலை
**நாள் :** 15.04.2019

இப்படிக்கு,
தலைமையாசிரியர்,
நகராட்சி மேல்நிலைப்பள்ளி,
திருவண்ணாமலை.

**செய்திக்கட்டுரை**

ஏப்ரல் திங்கள் முதல்நாள் திங்கட்கிழமையன்று எங்கள் நகராட்சி மேனிலைப்பள்ளியில் பிற்பகல் 2.30 மணியளவில் 'அரியன கேள் புதியன செய்' என்ற திங்கள் கூடுகை நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவில் மாணவர் இலக்கியச் செல்வன் வரவேற்புரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து எமது பள்ளித் தலைமையாசிரியர் திரு.எழிலன் அவர்கள் தலைமையுரை ஆற்ற, சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்த கவிஞர் வாணி அவர்கள் 'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை' என்ற தலைப்பில் சிறப்புரை நல்கினார். பின்னர் மாணவர் ஏஞ்சலின் நன்றியுரைக்க, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

---

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் ''பல்கலைப் புலமை'' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ''தமிழ்கெழு கூடல்'' என்றவிடத்திலும் ''கலைப்புலமை'' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன ''தமிழ் இவை பத்துமே'', மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் ''தமிழ் மாலை'' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தக்கும். ('பண்பாட்டு அசைவுகள்' - தொ.பரமசிவன்)

1. **தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

தமிழ் எனும் சொல்லுக்கு

- இனிமை
- பண்பாடு
- அகப்பொருள்
- பாட்டு
- கவிதை
- அழகு
- மென்மை
- பல்கலைப்புலமை

என பல்வேறு பொருள்கள் உண்டு.

2. **பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**
   தமிழ் தழீஇய சாயலவர் :- சொல்லிசையளபெடை, அதூஉம் - செய்யுளிசை அளபெடை.

3. **தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**
   தமிழ் என்ற உடன் அமிழ்து அமிழ்து எனப் மனதில் தோன்றுகிறது.

4. **திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**
   தமிழ்மாலை

5. **பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**
   தமிழ் இனிமை.

## மொழியோடு விளையாடுக.

1. **எண்ணங்களை எழுத்தாக்குக.**

பாடிப் பாடி பறந்த பறவை
பருக நீரின்றி.......
தேடித் தேடி அலைந்ததே!
காய்ந்து கிடந்த குளமும்
ஓடி மறைந்த ஏரியும்
தாகம் தீர்க்க இயலாதே!
சொட்டும் நீரைக்கண்டு
சோர்வை தீர்த்துக் கொள்ளும் பறவை!
அந்தோ பரிதாபம்!
இனியேனும் வாழவிடுங்கள்
வன உயிரிகளை............



2. **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**
   **(எ.கா.) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்**
   அ) மயில் ஓர் அழகான பறவை.
   ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

**அ) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.**
   அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.
   ஆ)கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

**ஆ) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.**
   அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.
   ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

**இ)பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை**
   அ) பிறர் செய்த உதவியை மறக்கக் கூடாது.
   ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

**ஈ) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?**
   அ) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?
   ஆ) பக்கத்தில் ஏன் இருக்கவில்லை?

**உ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.**
   அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு. ஆ) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

3. **வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.**

**(எ.கா.) வா - வேர்ச்சொல்**

அருணா வீட்டுக்கு வந்தாள். (வினைமுற்று)
அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)
கருணாகரன் மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)
என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

**ஆ) பேசு - வேர்ச்சொல்**

அவன் பேசினான் (வினைமுற்று)
அவன் பேசிய வார்த்தை நன்று (பெயரெச்சம்)
அவன் பேசி முடித்தான். (வினையெச்சம்)
அவனுடன் பேசியவர் அவன் தந்தை (வினையாலணையும் பெயர்)

**ஆ) தா - வேர்ச்சொல்**

அவள் பேனா தந்தாள் (வினைமுற்று)
அது அவள் தந்த பேனா (பெயரெச்சம்)
எனக்கே அதைத் தந்துவிட்டாள் (வினையெச்சம்)
அவளுக்கு அப்பேனாவை தந்தவர் அவள் தந்தை (வினையாலணையும் பெயர்)

**இ) ஓடு - வேர்ச்சொல்**

பூனை ஓடியது (வினைமுற்று)
ஓடிய பூனையை நாய் துரத்தியது (பெயரெச்சம்)
பூனை ஓடி மறைந்தது (வினையெச்சம்)
நாயைத்தேடி ஓடியவர் விழுந்தார். (வினையாலணையும் பெயர்)

**ஈ) பாடு - வேர்ச்சொல்**

குயில் பாடியது (வினைமுற்று)
குயில் பாடிய பாட்டு இனிமையாக இருந்தது (பெயரெச்சம்)
குயில் பாடி முடித்தது. (வினையெச்சம்)
குயில் போலப் பாடியவர் யார் எனத்தெரியவில்லை. (வினையாலணையும் பெயர்)

**கலைச்சொல் அறிவோம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அழகியல் | - Aesthetics | கலை விமர்சகர் | - Art Critic | புலம்பெயர்தல் | - Migration |
| இதழாளர் | - Journalist | புத்தக மதிப்புரை | - Book Review | மெய்யிலாளர் | - Philosopher |

**நன்னூல் பாயிரம்**

**இலக்கணக்குறிப்பு :**

**மாநகர்** - உரிச்சொற்றொடர்
**காட்டல், கோடல்** - தொழிற்பெயர்கள்
**கேட்போர்** - வினையாலணையும் பெயர்
**ஐந்தும்** - முற்றும்மை

**பகுபத உறுப்பிலக்கணம்:**

**வைத்தார் - வை + த் + த் + ஆர்**
வை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**புணர்ச்சி விதி:**

**அணிந்துரை - அணிந்து + உரை**

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் - அணிந்த் + உரை
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - அணிந்துரை

**பொதுச்சிறப்பு - பொது + சிறப்பு**

- இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் - பொதுச்சிறப்பு.

## கூடுதல் வினாக்கள்

## கவிதைப்பேழை! யுகத்தின் பாடல் - சு.வில்வரத்தினம்

### பலவுள் தெரிக

1. **கவிதையை இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் ஆற்றல் கொண்டவர் யார்?**
அ) சு.வில்வரத்தினம் ஆ) இந்திரன் இ) அ.முத்துலிங்கம் **[அ) சு.வில்வரத்தினம்]**

2. **மனித இனத்தின் ஆதி அடையாளமாகத் திகழ்வது ______.**
அ) நாடு ஆ) மொழி இ) இனம் **[ஆ) மொழி]**

3. **யாழ்ப்பாணம் புங்குடுத்தீவில் பிறந்தவர் யார்?**
அ) சு.வில்வரத்தினம் ஆ) இந்திரன் இ) அ.முத்துலிங்கம் **[அ) சு.வில்வரத்தினம்]**

4. **உயிர்த்தெழும் காலத்துக்காக என்னும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்**
அ) சு.வில்வரத்தினம் ஆ) இந்திரன் இ) அ.முத்துலிங்கம் **[அ) சு.வில்வரத்தினம்]**

1. **புதுக்கவிதை விளக்கம் தருக.**
   - ➢ மரபின்கட்டுப்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட செய்யுள் வடிவமே புதுக்கவிதை ஆகும்.
   - ➢ படிப்போரின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துவதே இதன் தலையாய பண்பாகும்.
   - ➢ எளியோரும் தன் உணர்வைக் கவிதையாய் வடிக்கும் வாயில் புதுக்கவிதையாகும்.

2. **'காலத்தை வென்ற மொழி' என்ற தலைப்பில் கவிதை படைக்க.**

ஆதியும் அந்தமும் இல்லா
அழகிய மொழி எம்மொழி!
அகிலத்தை ஆளவந்த
ஆயிரங்காலத்து பயிர் எங்கள் மொழி
அமுதத்தில் ஊற்றெடுத்த
அவென்னும் உயிர்ப்புடன் குலவிடும் மொழி
எங்கள் மூச்சினிலே!
பேச்சினிலே!
காற்றினிலே கலந்திட்ட
காலத்தை வென்றுவிட்ட மொழி!

---

## உரைநடை பேச்சுமொழியும் கவிதைமொழியும் - இந்திரன்

### பலவுள் தெரிக

1. **கலைகளின் உச்சம் எது?**
அ) கட்டுரை ஆ) கவிதை இ) கதை **[ஆ) கவிதை]**

2. **கவிதையினைப் பேசுவதுபோல எழுதுவதே உத்தமம் என்றவர் யார்?**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி **[அ) பாரதியார்]**

3. **மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிகிறது என்றுக் கூறியவர் யார்?**
அ) வால்ட் விட்மன் ஆ) எர்னஸ்ட் காசிரர் இ) பாப்லோ நெரூடா **[ஆ) எர்னஸ்ட் காசிரர்]**

4. **ஆசிரியர் இந்திரன் அவர்கள் பேச்சுமொழியினைக் கவிதைகளில் பயன்படுத்துபவர்கள் ______ வகையினர் என்று குறிப்பிடுகிறார்?**
அ) 3 ஆ) 4 இ) 6 **[அ) 3]**

5. **புதுக்கவிதையின் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்? எந்த நாட்டைச் சார்ந்தவர்?**
அ) பாப்லோ நெரூடா, கனடா ஆ) வால்ட் விட்மன், அமெரிக்கா
இ) ஸ்டெஃபான் மல்லார்மே, பிரான்சு **[ஆ) வால்ட் விட்மன், அமெரிக்கா]**

6. **ஸ்டெஃபான்மல்லார்மே எந்நாட்டைச் சேர்ந்தவர்?**
அ) பிரான்ஸ் ஆ) அமெரிக்கா இ) கனடா **[அ) பிரான்ஸ்]**

7. **'தமிழின் கவிதையியல்' நூலாசிரியர் யார்?**
அ) இந்திரன் ஆ) பாரதியார் இ) கா. சிவத்தம்பி **[இ) கா. சிவத்தம்பி]**

8. **உரையாசிரியர் இந்திரனின் இயற்பெயர் ______.**
அ) இராசேந்திரன் ஆ) இராமலிங்கம் இ) இராமச்சந்திரன் **[அ) இராசேந்திரன்]**

9. **மொழியில் மிதந்துகொண்டுதான் நான் பிறந்திருக்கிறேன்! என்று கூறியவர் யார்?**
அ) எர்னஸ்ட் காசிரர் ஆ) பாரதியார் இ) இந்திரன் **[இ) இந்திரன்]**

10. **நேரடி மொழி எனக்குறிப்பிடப்படுவது ______.**
அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி இ) சைகை மொழி **[ஆ) பேச்சுமொழி]**

11. **'புல்லின் இதழ்கள்' என்ற உலகப்புகழ் பெற்ற நூல் யாருடைய படைப்பாகும்?**
அ) பாப்லோ நெரூடா ஆ) மல்லார்மே இ) வால்ட்விட்மன் **[இ) வால்ட்விட்மன்]**

12. **வால்ட்விட்மன் தன்னுடைய கவிதையில் தோற்காத நகரம் என்று எதனைச் சுட்டுகிறார்?**
அ) தன்னுடைய நகரம் ஆ) நண்பர்களின் நகரம் இ) எதிரிகளின் நகரம்
**[ஆ) நண்பர்களின் நகரம்]**

13. **பின்வரும் கவிஞர்களுள் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர் யார்?**
அ) பாப்லோ நெரூடா ஆ) வால்ட் விட்மன் இ) ஸ்டெஃபான் மல்லார்மே
**[இ) ஸ்டெஃபான் மல்லார்மே]**

14. **குறியீட்டுக் கவிதை எழுதுவதில் தேர்ந்தவர் யார்?**
அ) பாப்லோ நெரூடா ஆ) வால்ட் விட்மன் இ) ஸ்டெஃபான் மல்லார்மே
**[இ) ஸ்டெஃபான் மல்லார்மே]**

15. **களைத்துப்போன உம் கத்தரிக்கோலால் காலத்தை வெட்ட முடியாது என்ற வரிகள் யாருடையன?**
அ) பாப்லோ நெரூடா ஆ) வால்ட் விட்மன் இ) ஸ்டெஃபான் மல்லார்மே
**[அ) பாப்லோ நெரூடா ]**

16. 'பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்' எந்த மொழியின் கவிதை தொகுப்பு எது?

அ) இத்தாலி ஆ) ஒரியா இ) பிரெஞ்சு [ஆ) ஒரியா]

## குறுவினா

1. **மொழியால் அதிகாரம் பிறப்பது எப்பொழுது?**
   - மொழி வழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அப்பொருளின் மீது தமக்கு அதிகாரம் பிறந்துவிடுவதாக ஆசிரியர் கூறுகிறார்.

2. **கவிஞர்கள் நேரடி மொழி என்று எதைக் கருதுகிறார்கள்?**
   - கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரில் இருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர்
   - இதையே அவர்கள் நேரடிமொழி எனக் கருதுகின்றனர்.

3. **சொற்களை எவ்வாறு பயன்படுத்தி பொருள் வேறுபாட்டினை ஏற்படுத்த முடியும்?**
   - ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் இவற்றால் பொருள் வேறுபாட்டினை ஏற்படுத்த முடியும்.

4. **மலையாள கவிஞர் ஆற்றூர் ரவிவர்மா பேச்சுமொழி குறித்துக் கூறுவன யாவை?**
   - நேரடி மொழியாகிய பேச்சுமொழிக்குப் பழமை தட்டுவதில்லை.
   - அது வேற்றுமொழியாவதுமில்லை.
   - எப்பொழுதும் உயிர்ப்புடன் மாறிக்கொண்டே இருக்கும்.
   - பேச்சுமொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா, இறந்த காலத்தவரா என நிர்ணயிக்கிறது.

5. **கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு இந்திரன் அளிக்கும் விடை யாது?**
   - கவிதை என்பது ஒரு பொருளன்று.
   - அது மொழிக்குள் உலகையும், உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு ஆகும்.

6. **இந்திரனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது? அது எம்மொழியின் மொழிப் பெயர்ப்பு நூலாகும்?**
   - மனோரமா பிஸ்வாஸின் 'பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்' எனும் ஒரிய மொழி நூலின் மொழிபெயர்ப்புக்காக இந்திரன் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்.

7. **பேச்சு மொழியைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்திய மூன்று வகை கவிஞர்கள் யார்யார் என இந்திரன் தம் கட்டுரையில் சுட்டுகிறார்?**
   - வால்ட் விட்மன்
   - கவிஞர் மல்லார்மே
   - பாப்லோ நெரூடா

8. **மொழி பற்றி எர்னஸ்ட் காசிரர் கூறும் கருத்துகள் யாவை?**
   - மொழி என்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன.

9. **மொழி வெளிப்பாட்டின் பகுதிகள் எவை?**
   - கை, கால், அசைவுகள், முகத்தின் தசை நார் சுருக்க அபிநயங்கள் போன்றவை மொழி வெளிப்பாட்டின் கூறுகள் ஆகும்.

10. இந்திரன் நடத்திய இதழ்கள் எவை?
- வெளிச்சம், நுண்கலை

11. வால்ட்விட்மன் எவ்வாறெல்லாம் விளங்கினார்?
- கவிஞராகவும், இதழாளராகவும், கட்டுரையாளராகவும் விளங்கினார்.

## கவிதைப்பேழை! நன்னூல் பாயிரம் - பவணந்தியார்

### பலவுள் தெரிக

1. தமிழின் முதல் இலக்கண நூல் எது?
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) யாப்பருங்கலகாரிகை **[அ) தொல்காப்பியம்]**

2. நன்னூல் எத்தகைய நூல்?
அ) வழி நூல் ஆ) சார்பு நூல் இ) தழுவல் நூல் **[அ) வழி நூல்]**

3. நன்னூல் கூறும் இலக்கண வகைகள் எவை?
அ) எழுத்து, பொருள் ஆ) எழுத்து, சொல் இ) எழுத்து, சொல், பொருள் **[ஆ) எழுத்து, சொல்]**

4. பவணந்தியார் நன்னூலை யார் வேண்டுகோளுக்கு இணங்க பாடினார்?
அ) சீயகங்கன் என்ற சிற்றரசர் ஆ) தொல்காப்பியர் இ) சடையப்பர் **[அ) சீயகங்கன் என்ற சிற்றரசர்]**

5. அமை - எனும் சொல்லின் பொருள் யாது?
அ) காற்று ஆ) தென்றல் இ) மூங்கில் **[இ) மூங்கில்]**

6. நன்னூலின் ஆசிரியர் யார்?
அ) பவணந்தி முனிவர் ஆ) தொல்காப்பியர் இ) தண்டி **[அ) பவணந்தி முனிவர்]**

### குறுவினா

1. நூலின் பெருமையை அலங்கரித்துச் சொல்லுவது எது?
- அணிந்துரை, புனைந்துரை

2. பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
- இரண்டு வகைப்படும்.
- அவை பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் ஆகும்.

3. பொதுப்பாயிரத்தின் வாயிலாக அறியப்படும் செய்திகள் யாவை?
- நூலின் இயல்பு
- ஆசிரியரின் இயல்பு
- கற்பிக்கும் முறை
- மாணவர் இயல்பு
- கற்கும் முறை
- இந்த ஐந்து கருத்துகளும் பொதுப்பாயிரத்தின் வாயிலாக அறியப்படும் கருத்துகள் ஆகும்.

4. **பாயிரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**
- முகவுரை
- பதிகம்
- அணிந்துரை
- புனைந்துரை
- நூல்முகம்
- புறவுரை
- தந்துரை

5. **சிறப்புப் பாயிரத்தால் அறியலாகும் செய்திகள் யாவை?**
- நூலாசிரியர் பெயர்
- நூல் பின்பற்றிய வழி
- நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
- நூலின் பெயர்
- தொகை, வகை, விரி ஆகியவற்றுள் இயற்றப்பட்ட யாப்பு வகை
- நூலில் குறிப்பிடப்படும் கருத்து
- நூலைக் கேட்போர் (மாணவர்)
- நூலைக் கற்பதால் பெறுகின்ற பயன்
- ஆகிய எட்டு செய்திகளைத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரமாகும்.

6. **அணிந்துரையை விளக்குக.**
- மாடங்களுக்கு (மாளிகை) ஓவியங்களும்
- நகரங்களுக்குக் கோபுரங்களும்
- அழகிய மகளிருக்கு அணிகலன்களும் அழகுதருவது போல
- எல்லாவகை நூல்களுக்கும் முகப்பில் அழகு தருவது அணிந்துரை ஆகும்.

7. **பவணந்தியாரின் உருவச் சிற்பம் எங்கே அமைக்கப்பட்டுள்ளது?**
- ஈரோடு மாவட்டம்
- மேட்டுப்புதூர் (சீனாபுரம் அருகில் - பெருந்துறையிலிருந்து கோபி செல்லும் வழி)

8. **நன்னூலில் உள்ள எழுத்ததிகார இயல்களை எழுதுக.**
- எழுத்தியல்
- பதவியல்
- உயிரீற்றுப்புணரியல்
- மெய்யீற்றுப் புணரியல்
- உருபு புணரியல்
- என ஐந்து இயல்களைக்கொண்டது எழுத்ததிகாரமாகும்.

9. **நன்னூலில் உள்ள சொல்லதிகார இயல்களை எழுதுக.**
- பெயரியல்
- வினையியல்
- பொதுவியல்
- இடையியல்
- உரியியல்
- என ஐந்து இயல்களைக் கொண்டது சொல்லதிகாரமாகும்.

விரிவானம் **ஆறாம் திணை** - அ. முத்துலிங்கம்

## பலவுள் தெரிக

1. அ.முத்துலிங்கம் இலங்கையில் எங்கு பிறந்தார்?
அ) யாழ்ப்பாணத்தில் ஆ) புங்குடுத்தீவில் இ) கொக்குவில் [இ) கொக்குவில்]

2. அ.முத்துலிங்கம் இலங்கையில் தங்கி இருந்த இடத்தின் பெயர் எது?
அ) கண்டி ஆ) மவுண்லவினியா இ) புங்குடுத்தீவு [ஆ) மவுண்லவினியா]

3. ராபின்சன் குரூசோ - என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) டேனியல் டிஃபோ ஆ) இந்திரன் இ) சாண்டில்யன் [அ) டேனியல் டிஃபோ]

4. கடல்புறா என்னும் நூலின் ஆசிரியர் யார்?
அ) அகிலன் ஆ) இந்திரன் இ) சாண்டில்யன் [இ) சாண்டில்யன்]

5. ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூலை எரித்தால் போதும் - என்று குறிப்பிடும் நூல் எது?
அ) ஃபாரன்ஹீட் 451 ஆ) ஃபாரன்ஹீட் 461 இ) ஃபாரன்ஹீட் 541
[அ) ஃபாரன்ஹீட் 451]

6. தமிழர் பாரம்பரிய நாள் எது?
அ) ஜனவரி 14 ஆ) பிப்ரவரி - 14 இ) நவம்பர் - 14 [அ) ஜனவரி 14]

7. உலகின் 2-வது பெரிய தேசம் எது?
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) கனடா [இ) கனடா]

8. ஜி.யு.போப் பிறந்த நாடு எது?
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) கனடா [இ) கனடா]

9. உலகம் முழுவதும் எத்தனை கோடி தமிழர்கள் இருக்கிறார்கள்?
அ) 10 கோடி ஆ) 8 கோடி இ) 6 கோடி [ஆ) 8 கோடி]

10. சூரியன் மறையாத அரசு என அழைக்கப்பட்ட அரசு எது?
அ) கனடா ஆ) பிரிட்டன் (பிரித்தானியம்) இ) இத்தாலி
[ஆ) பிரிட்டன் (பிரித்தானியம்)]

11. அ.முத்துலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பில் இலங்கை அரசின் சாகித்யப் பரிசினைப் பெற்ற நூல் எது?
அ) வடக்கு வீதி ஆ) வம்சவிருத்தி இ) மகாராஜாவின் ரயில் வண்டி
[ஆ) வம்சவிருத்தி]

12. ஆறாம் திணை எது?
அ) பனியும் - பனிசார்ந்த இடம் ஆ) மணலும் மணல் சார்ந்த இடமும்
இ) காடும் காடு சார்ந்த இடம் [அ) பனியும் - பனிசார்ந்த இடம்]

13. அகதிகள் கூடத்தில் மதிய உணவிற்காக யாரைப்போல் நின்றதாக முத்துலிங்கம் கூறுகிறார்?
அ) மறியல் கைதிகள் ஆ) சிறை கைதிகள் இ) ஆயுள் கைதிகள்
[அ) மறியல் கைதிகள்]

14. **காகத்திற்குப் பறக்கும் எல்லை ______ தூரம்.**
அ) 10 மைல் ஆ) 4 மைல் இ) 2 மைல் **[இ) 2 மைல்]**

15. புலம் பெயர்தல் சங்க இலக்கியத்தில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது? **- பொருள்வயின் பிரிவு**
16. திருக்குறளையும், திருவாசகத்தையும் மொழிப்பெயர்த்தவர் யார்? **- ஜி.யு.போப்**
17. எதனைச் சாகடித்தால் மனிதன் செத்துவிடுவான்? **- அறிவை**
18. கனடாவில் எத்தனை லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள்? **- 3 இலட்சம்**
19. தமிழர் திருநாளாக ஜனவரி 14 ஆம் நாளை எந்த ஆண்டு அறிவித்தார்கள்? **- 2012**
20. வன்னி வீதி எங்கு உள்ளது? **- கனடாவில்**
21. ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்களைக் கொண்ட நூல் எது? **- ஐங்குறுநூறு**
22. ஆறு மணிக்குருவி எவ்வளவு தூரம் வரை பறக்கும்? **- எல்லையே கிடையாது**
23. அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் - சிறுகதைகளின் ஆசிரியர் **- அ.முத்துலிங்கம்**

---

## இனிக்கும் இலக்கணம் — மொழி முதல், இறுதி எழுத்துகள்

### குறுவினா

1. **சுட்டெழுத்துகள் எத்தனை? அவை யாவை?**
   - மூன்று
   - அ, இ, உ
2. **'ஙனம்' எனும் சொல் எவ்வெழுத்துகளுடன் இணைந்து வரும்?**
   - அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும்
   - எ, யா என்ற வினா எழுத்துகளுடனும் இணைந்து வரும்.
   - எ.கா.- அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்
3. **உங்ஙனம் என்னும் தமிழ்ச்சொல்லைத் தற்போது பயன்படுத்தும் தமிழர்கள் யார்?**
   - இலங்கைத்தமிழர்கள்
4. **புணர்ச்சி என்பது யாது?**
   - நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் சேர்வது புணர்ச்சி ஆகும்.
5. **குற்றியலுகரத்தின் ஆறுவகைகளையும் சான்றுடன் விளக்குக.**
   - நெடில் தொடர்க் குற்றியலுகரம் - வீடில்லை - வீடு + இல்லை
   - உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் - முரட்டுக்காளை - முரடு + காளை
   - வன் தொடர்க் குற்றியலுகரம் - அச்சுப்பலகை - அச்சு + பலகை
   - மென் தொடர்க் குற்றியலுகரம் - பஞ்சுபொதி - பஞ்சு + பொதி
   - இடைத்தொடர்க் குற்றியலுகரம் - மார்பு கூடு - மார்பு + கூடு
   - நெடில் தொடர்க் குற்றியலுகரம் - எஃகுகம்பி - எஃகு + கம்பி
6. **இலக்கண வகையில் சொற்கள் எத்தனை வகைப்படும்?**
   - நான்கு வகைப்படும்.
   - அவை : பெயர், வினை, இடை, உரி ஆகும்.